

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோட்டை பகுதி கழகத்தின் சார்பில் திருநகர் காலனி கோட்டை பகுதி அலுவலகம் முன்பு கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு பகுதி கழக செயலாளர் பொ.ராமசந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு அண்ணா கல்லூரி மாணவிக்கு கல்வி உதவி தொகை ரூ. 25000 வழங்கப்பட்டது. நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் இரா. ஜெயந்தி, பகுதி கழக நிர்வாகிகள் அண்ணாதுரை, பாபு, மீனாட்சி குமரைசன், வேலுமணி, பாலசுந்தரம், வட்ட கழக செயலாளர்கள் பாலன், பூபாலன், பிரகாஷ், மகளிரணி பாத்திம சாகுல், லட்சுமி கதிரவன், ஜன்னத்து நிஷா, தங்கவேல், சுல்தான், ஆறுமுகம், அரவிந்த், புவனேஸ்வரன், ஜாகிர்உசேன், பாலசுப்பிரமணியம், மீரான், அழகர்சாமி, தங்கவேல், செல்லம், புத்தர், சரண்யா, தொகுதி ஆறுமுகம், மூர்த்தி, தியானேஸ்வரன், சசிகுமார், குமார், செபாஸ்டின், செல்லம், மணிகண்டன், அமல்ராஜ், ரவிச்சந்திரன், பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சூலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு வரவேற்புரையில், மாநில மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், துணை அமைப்பாளர் விக்னேஷ், தண்டபாணி முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில் கலைஞர் 103வது பிறந்த நாள் - வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல்!

# இந்த ஆட்சிக்கு பவர் கொடுத்தது தி.மு.க. - பவர் கட் செய்தது த.வெ.க.!

## சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜூன் 11 -

இந்த ஆட்சிக்கு பவர் கொடுத்தது தி.மு.க. - பவர் கட் செய்தது த.வெ.க. என்று திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவில், 1500 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி உரையாற்றும்போது, கழகக் கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் குறிப்பிட்டார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

09.06.2026 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், காந்தி சிலை அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா, வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் தலைமை வகித்தார்.


ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், பகுதி கழக பொறுப்பாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ், அ.கோவிந்தன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், மாநகர நிர்வாகிகள் வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜியராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ்,பிரபு, ஹக்கிம்.சேட், மாநகர அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பகுதி கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ந.சீனுவாசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, சட்டமன்ற கழக கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் 1500 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்களும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பொதுக்கூட்டத்தில் கழக சட்டமன்ற கொறடா எ.வ.வேலு உரையாற்றும்போது...



ஆன்மீகமும், திராவிடமும் சேர்ந்த சிறப்பிற்குரிய மண் இந்த மண். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலை பா.ஜ.க. ஆட்சியில் தொல்லியியல் துறை கையகப்படுத்தி மேற்கொண்ட முயற்சியை தடுத்து நிறுத்தியவர் கலைஞர். திருவண்ணாமலைக்கு ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். அதன் மூலம் இந்த நகரின் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் திருவண்ணாமலை மாவட்டம் வளர்ச்சி பெற்றது. திருவண்ணாமலை புதிய மாவட்டமாக உருவானது.

**திருவண்ணாமலைக்கு பல்வேறு திட்டங்கள்!**

போக்குவரத்து மண்டலம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செய்யாறு சிப்காட், உழவர் சந்தை என எண்ணற்ற வளர்ச்சிப் பணிகள் தி.மு.க. ஆட்சியில் நடந்தது.

திராவிட மாடல் ஆட்சியில் திருவண்ணாமலை மாட வீதி கான்கிரீட் சாலையாக தரம் உயர்த்தப்பட்டது. புதிய பேருந்து நிலையம், ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிகள், டைட்டில் பார்க், செங்கம் அரசு கலை கல்லூரி, ஸ்டாலின் பூங்கா, புதிய காவல் நிலையங்கள், புதிய தீயணைப்பு நிலையங்கள், செங்கம், பெரணமல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் சார் பதிவாளர் அலுவலகங்கள் என ஏராளமான பணிகள் நிறைவேற்றப்பட்டன.

சாதனையின் பட்டியலைச் சொன்னால் பலமணி நேரம் ஆகும். மாற்றம் கொண்டு வருவதாக சொன்னவர்கள், என்ன மாற்றத்தை கொண்டு வரப்போகிறார்கள். எந்த கொம்பனாலும், இனி எந்த ஆட்சியாளும் இது போன்ற சாதனைகளை செய்ய முடியாது.

தி.மு.க.வினரின் உழைப்பினால் வெற்றிபெற்ற தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று இருந்தவர்களை அனுப்பி வைத்து பவர் கொடுத்ததன் மூலம் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

**ரீல்ஸ் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள்!**

இந்த ஆட்சிக்க பவர் கொடுத்தது தி.மு.க..., ஆனால்ப வர் கட் செய்தது த.வெ.க. என்று மக்கள் பேசுகின்றனர். சினிமா இமேஜ் மூலம் மக்கள் ஓட்டுபோட்டுவிட்டார்கள்ரீல்ஸ் மூலம் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். நாங்கள் பாராமுகமாக இருந்து விட்டதால் வந்துவிட்டீர்கள். வீரமாக நீங்கள் வந்துவிடவில்லை. சினிமா மூலம் மக்களுக்கு கொள்கைகளைச் சொன்ன இயக்கம்.

மிஸ்டர் சி.எம். மொழிக்காக போராடினாரா? சென்னையில் வெள்ளம் பாதித்தபோது மக்களை பார்த்தாரா, தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைத்தாரா, தொழிலார்களின் போராட்டத்தில் பங்கு கொண்டாரா, மறியலில் ஈடுபட்டாரா, முழுக்க முழுக்க சினிமா இமேஜ் மூலம் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அந்த உண்மையை சொன்னால் கைகளை இரு பக்கமும் வீசிக்கொண்டு பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

அவர் நடித்த சினிமா படங்கள் பற்றி மட்டுமே அவரது நினைவில் இருக்கும் தமிழ்நாட்டைப் பற்றி ஏதாவது தெரியுமா? மிஸ்டர் சி.எம். சினிமா இமேஜ் மூலம் பெற்ற வெற்றி என்று சொன்னால் ஏன் கோபம் வருகிறது, தமிழ் நாட்டிற்காக நீங்கள் செய்த சாதனை என்ன? 100 நாள் வேலை திட்டத்தின் பெயரில் இருந்த மகாத்மா காந்தியின் பெயரை நீக்கி விட்டார்களே அதை மீண்டும் மாற்றி வைப்பதற்கு குரல் கொடுப்பீர்களா?

100 நாள் வேலை திட்டத்திற்கு ரூ.12698 கோடி நிதியை நாங்கள் பெற்று தந்தோம். ஆனால், இன்றைக்கு ரூ.3923கோடியாக நிதியை குறைத்துள்ளார்கள் சி.எம்.சார் தி.மு.க. ஆட்சி காலத்தில் வாங்கி வந்ததை போல அந்தப் பணத்தை உங்களால் வாங்கி வர முடியுமா? வரும் 18ஆம் தேதி சட்டமன்றம் கூட இருக்கிறது. அப்போது கேட்க வேண்டிய கேள்விகளை எல்லாம் அங்கு வைத்துக் கொள்கிறோம். இப்படிப்பட்ட சுனாமியிலும் திருவண்ணாமலை தொகுதியில் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

பொதுக்கூட்டத்தில் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ. கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட துணை செயலாளர் மு.பெ. கிரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் துணைத் தலைவர், க.சௌந்தரராசன், மாநில அமைப்புசாரா தொ.மு.ச., ஏ.ஏ.ஆறுமுகம், மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபாகரன், ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர்.வ.அன்பரசு, என்.மாசிலாமணி, கற்பகம் சரவணன், உ.நித்யா,

ஒன்றிய செயலாளர்கள் மு.பன்னீர்செல்வம், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, த.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் நா. பழனி, அ.தண்டபாணி, து.கென்னடி, க.பிரபாகரன் மற்றும் சம்மந்தனூர் மணி, ஏந்தல் நாக.சங்கர், ப.யுவராஜா, சுபாசெல்வமணி, பா.ஏழுமலை, அடிஅண்ணாமலை பாபு, எம்.ஜி.சுப்பிரமணி, இல.சரவணன், ஏ.டி.துரை மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர துணை செயலாளர் மு.கருணாமூர்த்தி நன்றி கூறினார்.

முன்னதாக அம்பேத் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,கமலாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.30.44லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தினையும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்து பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தினகரன், ஹைகோர்ட் மஹாராஜா பள்ளித் தலைமை ஆசிரியை மெஜி ஒன்றிய பொறியாளர் செல்வஜோதி, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் பேரூர் கழக பொருளாளர் சரவணன், கிளைச் செயலாளர் சுப்பையா கழக நிர்வாகி வேலுச்சாமி உள்ளிட்ட ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து

# தமிழ் செய்தித் தொலைக்காட்சிகள் நீக்கம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, ஜூன் 11-**

**தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து சில தமிழ் செய்தித் தொலைக் காட்சிகள் நீக்கப்பட்டுள்ளன.**

**அதற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து @NewsTamilTV24x7,

@polimernews மற்றும் @TamilJanamNews ஆகியவை நீக்கப்பட்டிருப்பது, பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பது மட்டுமின்றி ஜனநாயகத்திற்கும் எதிரானதாகும்.

அரசின் நிர்வாக திறமையின்மையை வெளிச்சமிட்டு காட்டும் ஊடகங்களை முடக்குவதும், மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாமல் அது முன்வைக்கப்படும் தளங்களையே இருட்டடிப்பதும் தான் த.வெ.க. அரசு அளிக்க விரும்பும் மாற்றமா?

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கோவை தெற்கு மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் கூட்டம்!

கோவை, ஜூன் 11-

திராவிட மாடல் ஆட்சியில் கடந்த ஜனவரி மாதம் நிறைவேற்றப்பட்ட திட்டத்தை ஜூன் மாதத்தில் புதிய அரசின் திட்டம் போல ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரப்படுத்துவதற்கு வெட்கமாக இல்லையா விஜய் அரசே? கோவை தெற்கு மாவட்ட மாணவர் அணி கூட்டத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றம்.

கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சூலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு வரவேற்புரையில் மாநில மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் விக்னேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தண்டபாணி நன்றியுரையாற்றினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கொ.ம.தே.க கே.நித்தியானந்தம் அவர்களுக்கும், வால்பாறை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக வேட்பாளர் குட்டி (எ) சுதாகர் அவர்களுக்கும் சிறப்பு வாய்ந்த வரலாற்று வெற்றி பெற கடுமையாக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மாணவரணி நிர்வாகிகளுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். அதே போல் சூலூர், கிணத்துக்கடவு தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர்களை ஆதரித்து கடுமையாக உழைத்த மாணவர் அணி நிர்வா கிகளுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நடந்து முடிந்த 17 வது சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு 59 சட்டமன்ற உறுப்பினர்களோடு வலிமை பொருந்திய எதிர்க்கட்சியாக செயல்படும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சட்டமன்றத்தில் வழிநடத்த எதிர்க்கட்சித் தலைவராகவும், தி.மு.க. சட்டமன்றகுழு உறுப்பினர்கள் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கழக இளைஞர் அணி செயலாளர், இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக உலகமே வியக்கும் வகையில் சிறப்பாக ஆட்சி புரிந்த தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட பேரரசர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை பத்திரிகையாளர் சங்க முன்னாள் தலைவர்

# விடுதலை ஸ்ரீதரின் தாயார் திருமதி வி.சுசிலா மறைவு!

வந்தவாசி, ஜூன். 11-

சென்னை பத்திரிகையாளர் சங்க (MUJ) முன்னாள் தலைவரும், மூத்த பத்திரிகையாளருமான விடுதலை வி.ஸ்ரீதரனின் தாயாரும், நினைவில் வாழும் காவல் துறை அதிகாரி எம்.எஸ். வேணுகோபால் அவர்களின் மனைவியுமான திருமதி வி.சுசிலா அவர்கள் (வயது 85) நேற்று (10.6.2026 - புதன்கிழமை)



காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த வி.சுசிலா அவர்களின் இறுதி ஊர்வலம் வந்தவாசியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (11.6.2026 - வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிங்கார இரத்தினசபாபதி

**ஜூன் 11 (2020)**



தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.

கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்தோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**